சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 90/2018

பெயர் திரு. சண்முகம் நாள்.20.02.2026
த/பெ. கிருஷ்ணமூர்த்தி

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கு சொத்து புதிய புல எண்.19/14D. வழக்கு சொத்திற்கு அடுத்த கிழக்கே பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் புல எண்.19/4 என்றால் சரிதான். புல எண்.19/4 யை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். புல எண்.19/4 ல் தான் 1ம் பிரதிவாதி சுற்றுச் சுவர் எழுப்பினார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வருவாய் துறை மூலம் அளந்து பின்னர் சுற்றுச் சுவர் எழுப்பினார் என்றால் இல்லை. இவ்வழக்கிற்கு முன்பு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மீது மு.வ. எண்.7/2017 எனும் வழக்கைத் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

2) அந்த சுற்றுச் சுவரை மேற்கண்ட வழக்கிற்கு முன்பே 1ம் பிரதிவாதி கட்டிவிட்டார் என்றால் இல்லை. அவ்வழக்கிற்கு முன்பே 1ம் பிரதிவாதி 19/4 ல் தான் சுற்று சுவர் எழுப்பினார் என்றால் சரியல்ல. அவ்வாறு சுற்று சுவர் எழுப்பும்

போது நானும் அங்கு உடனிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் 2021ல் வழக்கு சொத்தை காலை 10.30 மணியளவில் பார்வையிட போவதாக எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அன்றைய தினம் காலை 11.45 மணிக்கு ஆரம்பித்து 01.15 க்கு நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அளவீடு முடித்துவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு அளக்கும் போது வடக்கு மற்றும் தெற்கு பகுதியை அளந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு மேல்புறம் அளந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு பிரதிவாதிகள் கீழ் புறம் அளக்க சொல்லி நீதிமன்ற ஆணையரிடம் வேண்டுகோள் விடுத்தார் என்றால் சரிதான். ஆனால் நீதிமன்ற ஆணையர் கீழ் புறம் அளக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3) நீதிமன்ற ஆணையர் கீழ் புறம் அளக்கவில்லை என்றாலும், அவ்வாறு அளந்திருந்தால் உண்மையான அளவீடு தெரிந்திருக்கும் என்று சொன்னாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பிரதிவாதிகள் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அவருக்கு அளித்த வாரண்டை முழுமையாக நிறைவேற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். அதில் ஆணையர் வழக்கு

சொத்திற்கு வந்தபோது தான் 19/14 என்பது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்ட விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். அதன் பின்பு அவ்வழக்கில் வழக்குரையில் திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அம்மனு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வழக்கை நான் திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான்.

4) பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் தான் சுற்று சுவர் கட்டியுள்ளனர் என்றாலும், என்னுடைய இடத்தில் கட்டவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி மு.வ.75/2019 என்ற வழக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிகளால் வழக்கு சொத்து ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்தும், 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்கை அனுமதிக்க வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.